Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49 | மலர் 9 | இதழ் 189

போன் 389 | National Tamil Daily | தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க ஆவணி 3 ஜ: அவ். 12 சனிக்கிழமை [19-8-67




# சீன தூதர் நியமனத்தில் அமெரிக்கா தலையிட்டதா?

## சீனத்தூதரக 'கோபத்துக்கு' அரசியல்தான் காரணமாம்

### அரசியல் வட்டாரங்கள் கருத்து

கொழும்பு, வெள்ளி

இலங்கையிலுள்ள சீனத்தூதரகம இலங்கை அரசாங்கத்துக்கு கடுமையான வார்த்தைகளைப் பிரயோகித்து ஆட்சேபக்குறிப்பு அனுப்பியதற்கு துறைமுகத்தில் நடந்த 'சம்பவங்கள்' மட்டுமதான் காரணம அல்லவென்றும வேறு அரசியல் பின்னணி ஒன்று இதற்குக் காரணம என்றும அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது.

அமெரிக்க மத்திய துப்பறியும் ஸ்தாபனம் ஒரு புறமும் சீனத்தூதரகம் மறுபுறமுமாக இலங்கை அரசாங்கத்துக்குத் தலையிடியைக் கொடுத்துள்ளதாகஅரசியல் வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது.

இலங்கையில் சீன ஸ்தானிராக புதிதாக ஒருவரை நியமிக்க சீன அரசாங்கம் முன்வந்து தாம் நியமிக்கவிரும்பியவரின் பெயரையும் இலங்கை அரசாங்கத்துக்குத் தெரிவித்திருந்ததாகவும் அந்தப்பெயருள்ளவரை ஸ்தானிகராக நியமிப்பதற்கு இலங்கை ஒப்புக் கொள்ளவில்லை யென்றும் இதற்கு அமெரிக்க மத்திய துப்பறியும் இலாகா இலங்கை அரசாங்கத்துக்குக் கூறிய ஆலோசனையே காரணமென சீன கருதியதென்றும் இதன் விளைவுதான் சீன இலங்கை அரசாங்கத்துக்கு 'கடுமையான ஆட்சேபம்' தெரிவிக்கக் காரணமென்றும் அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது. சீனவிலுள்ள இலங்கை ஸ்தானிகர் திரு. ரொபர்ட் குணவர்த்தன இப்பொழுது இலங்கைக்கு வந்து அரசாங்கத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திவருவதாகவும் இலங்கையில் சீன ஸ்தானிகராக சீன விரும்பியவரை நியமிப்பதற்கு அரசாங்கத்தைச் சம்மதிக்கச் செய்வதற்கு திரு. ரொபர்ட் குணவர்த்தன முயற்சிசெய்து வருவதாகவும் கூறப்படுகிறது.

கோப்பாய் வாசியான

## 7 பிள்ளைகளின் தந்தைக்கு லட்சம் ரூபாய் அதிர்ஷ்டம்

— நமது நிருபர் கா. யோகநாதன் —

யாழ்ப்பாணம், சனி

''எனக்கு தேசியசுவீப்பில் முதல்பரிசான லட்ச ரூபா கிடைத்தது இன்னும் எனது மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் தெரியாது. எனக்கு பரிசு கிடைத்ததை அறிந்ததும் நேராகபொலிஸ் நிலையத்திற்கு வந்துவிட்டேன்.''

தேசியசுவீப்பில் முதல் பரிசான லட்ச ரூபா பரிசு பெற்ற கோப்பாய் தெற்கு பழஞ்சந்தி ரோட்டிலுள்ள அ. சுப்பிரமணியம் [வயது 37] என்னிடம் நேற்று நண்பகல் கூறினார்.

ஏழுபிள்ளைகளுக்கு தந்தையான இவர் மகிழ்ச்சி மிகுதியிலோ என்னவோ, தனது இருபிள்ளைகளின் பெயரைக் கூட மறந்துவிட்டார். இவரின் மனைவியின் பெயர் பூரணம். மூத்த மகள் இந்திராதேவி(வயது 16), கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் படிக்கிறார். புஷ்பராசா [வயது 14], தவராசா [வயது 12], தேவராசா [வயது 9] இந்து [வயது 6], பாக்கியராசா [வயது 4], நாதன் [வயது 2] இவரின் மற்றக்குழந்தைகளாகும்.

15 வருடகாலமாக யாழ்ப்பாணத்தில் கார் சாரதியாக இருந்த இவர் 1962-ம் ஆண்டு வேலை இழந்தார். அதன்பின்னர் இது

(6-ம் பக்கம் பார்க்க)

முருங்கன் வியாபாரி கொலை

## ரகசியபொலிஸ் துப்புதுலக்கும்

யாழ்ப்பாணம், வெள்ளி

முருங்கனைச் சேர்ந்த குரூஸ் என்ற வியாபாரியின் மரணம் சம்பந்தமாகத் துப்புத் துலக்க இரகசியப் பொலிஸ் கோஷ்டியினரை உடனடியாக அனுப்பி வைக்குமாறு வடபகுதிப் பொலிஸ்சுப்பிரின்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் பொலிஸ் தலைமைக் காரியாலயத்தைக் கோரியுள்ளார்.

முருங்கனைச் சேர்ந்த மரணமான குரூஸ் பிரபல்யமான ஒரு வியாபாரியென்றும். இவர் எதிரிகள் சிலரால் கொலைசெய்யப்பட்டிருக்கலாமெனவும் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். பூட்டப்பட்ட அறைக்குள் இவர் இறந்து கிடக்கக் காணப்பட்டார். அறையின் கூரை பிரித்து உள்ளே இறங்கிய சிலர் அவரைக் கத்தியால் குத்திவிட்டுக் கூரை வழியாகவே வெளியேறியிருக்கலாமென சொல்லப்படுகின்றது.

(6- ம் பக்கம் பார்க்க)

## அவசரகாலம் நீடிப்பு

கொழும்பு, வெள்ளி

அவசரகாலநிலைமை மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது. இதற்கான கஸட் அறிவித்தல் இன்று வெளியிடப்பட்டது.

## 119 பேர் வேலையிழந்தனர் 131பேருக்கு மீண்டும் வேலை

### அரசியல் ஆசிரியர் பிரச்னை முடிந்தது என்கிறார் கல்வி அமைச்சர்

கொழும்பு, வெள்ளி

1965-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டதாக குற்றம் சாட்டி தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கி வைக்கப்பட்ட 250 ஆசிரியர்கள் பற்றிய விசாரணைகள் யாவும் முடிவடைந்துவிட்டனவென்றும் இவர்களில் 119 பேர் வேலையிலிருந்து

[6-ம்பக்கம் பார்க்க]

## 'ராதாவின் தோட்டத்தில் குடிசை எரிவதைப் பார்த்தேன்'

### எம். ஜி. ஆர். — ராதா வழக்கில் பொலிஸ் அதிகாரி சாட்சியம்

சென்னை, ஆகஸ்ட் 18

எம். ஆர். ராதா-எம். ஜி. ஆர். துப்பாக்கிச் சூட்டு வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது உதவி பொலிஸ் சுப்பிரின்டன்ட் வி பி. துரைசாமி சாட்சியமளித்தார்.

சம்பவதினம் ஒரு பொலிஸ்இன்ஸ்பெக்டரிடமிருந்து எனக்கு தகவல் கிடைத்தது. உடனே, சென்ட்தோமஸ் மவுண்ட் இன்ஸ்பெக்டரை ஆஸ்பத்திரிக்கு விரையும்படி உத்தரவிட்டேன். நான் ஆயுதம்தாங்கிய 24 பொலிசாருடன், எம். ஜி. ஆர். தோட்டத்துக்கும் ராதாவின் தோட்டத்துக்கும் போனேன். ராதாவின் தோட்டத்தில் ஓர் ஓலைக் குடிசை எரிந்து கொண்டிருப்பதையும் தீயணைக்கும் படையினர் அந்தத் தீயை அணைப்பதில் ஈடுபட்டிருப்பதையும் கண்டேன் என்று துரைசாமி கூறினார்.

சாட்சி குறுக்குவிசாரணை செய்யப்பட்டபோது, தமக்கு தகவல் தந்த இன்ஸ்பெக்டரின் பெயர் தெரியவில்லையென்றும் பொலிஸ் நிலைய சார்ஜண்டிடம் தகவலை ... பொலிஸ் ... க்கு அறிவிக்கும்படியும்

[6-ம் பக்கம் பார்க்க]




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருவாக்கு**

ஒருபொழுதும் மற்றவரின் எண்ணத்தைப் புண்படுத்தாதீர்கள், எல்லோரிடத்திலும் அன்புடன் இருங்கள். எவரையெல்லாந் திருத்தி ஆக்கமுயலுகின்றீர்களோ அவர்கட்குத் தொண்டு செய்யுங்கள். அவர்களிடம் அன்புகொண்டு அவர்களுக்காகத் தியானம்செய்து வழிபடுங்கள்.

—சுவாமி சிவானந்தர்.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க ஞு
ஆவணி மீ 3உ (19-8-67)

# என்ன நடக்கிறது?

நம்மைச்சுற்றி என்ன நடந்து கொண்டிருக்கிறது? அரசாங்கமும் ஐந்து வருட காலத்துக்கு ஆட்சிபுரிவதற்கு இந்த அரசாங்கத்துக்கு அதிகாரமளித்த பொதுமக்களும் தீவிரமாகச் சிந்திக்க வேண்டிய அவசியம் இன்றுபோல் என்றும் ஏற்படவில்லை என்று சொல்லலாம்.

ஐந்து வருடங்களுக்கு ஆட்சிபுரியும் அதிகாரம் பெற்ற திரு. டட்லிசேனநாயகாவின் தலைமையிலான "தேசிய அரசாங்கம்" ஆட்சிப்பீடத்திலமர்ந்து சுமார் இரண்டரை வருடங்கள் கிவிட்டன. தேர்தல் காலத்தில் அளித்த வாக்குறுதிகள் பலவற்றை இந்த அரசாங்கம் இதுவரை நிறைவேற்றவில்லையென்பது உண்மையே. வாழ்க்கைச் செலவு உயர்வைக் குறைப்பது. வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையைக் குறைப்பது ஆகியவை முக்கியமான இருபிரச்னைகள். இவ்விரு பிரச்னைகளையும் தீர்ப்பதாகக்கூறி ஆட்சிபீடத்திலமர்ந்தது இந்த அரசாங்கம் மட்டுமல்ல. முன்னைய அரசாங்கங்களும் இது போன்ற வாக்குறுதிகளை அளித்தன. அந்த அரசாங்கங்களும் இப்பிரச்னைகளைத் தீர்த்துவிடவில்லை. வாழ்க்கைச்செலவு உயர்வையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஓர் அரசியல் கட்சியோ, ஓர் அரசாங்கமோ தீர்த்துவிடக்கூடியவையல்ல. சகல கட்சிகளும் ஸ்தாபனங்களும் ஒன்றுசேர்ந்து தேசிய ஐக்கியத்தை நிலைநாட்டி அதன்மூலம் ஒருமித்த முயற்சி செய்தால்தான் இப்பிரச்னைகளையும் இதர தேசியப் பிரச்னைகளையும் தீர்க்கமுடியும்.

இந்நாட்டில் சீர்குலைந்திருந்த தேசிய ஐக்கியத்தை மீண்டும் நிலைநாட்ட பிரதமர் திரு. டட்லி சேனநாயகா முயற்சி செய்தார், செய்கிறார் என்பதும் உண்மையே. ஆயினும் அதே மனப்பான்மையுடன் அரசாங்கத்திலுள்ள மந்திரிகள், அதிகாரிகள், அரசாங்க ஊழியர் அனைவரும் தங்கள் கடமையைச் செய்கிறார்களா? அடுத்த தேர்தலைப்பற்றிய சிந்தனையும் அதிகார மோகமும், இன, மத மனப்பான்மையும் தேசிய ஐக்கிய முயற்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றன.

இதன் விளைவுதான் போதனாமொழிப் பிரச்னை மாவட்டசபை பற்றிய சர்ச்சை, மத உரிமை, குடியேற்றத் திட்டம் போன்ற பிரச்னைகள் அடிக்கடி தலைதூக்கக் காரணம்.

இச்சமயத்தில்தான் இலங்கை-இந்தியஒப்பந்த அமுல் சட்டம், மாவட்ட சபைகளை எதிர்த்து வகுப்பு வாதக்கூச்சலும்-விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம்பற்றி 'பரிவு' பிரசாரமும், பாட்டாளிமக்கள், ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காகக் குரலும் ஒலிக்கின்றன. இவைகளை அடைவதற்கு பொதுவேலை நிறுத்தம் அல்லது மற்றொரு 'ஹர்த்தால்' என்ற வார்த்தைகளும் காதில் விழுகின்றன. இதேசமயம் பலாத்காரப்புரட்சி என்ற கோஷமும் நாட்டின் பல மூலைகளிலும் 'மேடை அமைத்து' ஒலிபரப்பப் படுகின்றன. இந்த ஒலியுடன் சேர்ந்துதான் நமக்கு 'அரிசி அளப்போர்' ஏதோ ஒரு சாக்கை வைத்து அச்சுறுத்தல் குறிப்பு அனுப்புகின்றனர். அடுத்த ஆண்டு அவர்கள் அரிசி அளப்பார்களா என்ற ஐயமும் எழுந்துள்ளது.

நாம்எங்கே நிற்கிறோம், நமது எதிர்காலம் என்ன? ஆட்சி மாறினால் மட்டும் பிரச்னைகள் தீர்ந்துவிடுமா? என்பதற்கும் அரசாங்கமும் மக்களும் விழிப்புடனிருப்பது அவசியம்.

# 'மிகப் பவுத்திரமான பொருளையும் மனிதன் கெடுத்து விடுவான்'

## கண்டி திவ்ய ஜீவன சங்க சமய குரவர் தின விழாவில் பேச்சு

கண்டி, வெள்ளி

"'சமயத்தின் பாவம்' பற்றிப் பல ஞானிகள் கூறியிருக்கின்றனர். மிகப் பவுத்திரமான பொருளையும் கெடுக்கும் தீய சக்தி மனிதனிடம் உண்டு. பிரிவினை, பாகுபாடு, மதப் பெருமை, தீவிரவாதம் ஆகியவற்றை மனிதரிடையே வளர்த்துவிடும் அளவில் சமயமும், பாவத்துக்குச் சந்தர்ப்பமாகி விடுகிறது. எல்லாச் சமய குரவரும், மனிதர்களிடையே ஒற்றுமையும், சமாதானமும் நிலவ வேண்டுமென்றே விரும்பினர். ஆனால் சமயங்கள் தான் அதிக பிளவுகளுக்குக் காரணமாகியுள்ளன"

இவ்வாறு வண. ஜோக்கிம் பிள்ளை ஓ. எம். ஐ. கண்டி திவ்ய ஜீவன சங்கத்தின் ஆதரவில் சைவமகாசபை மண்டபத்தில் நடைபெற்ற சமய குரவர் தின விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் கூறினார்.

கண்டி திருத்துவக் கல்லூரியின் உப அதிபர் திரு. ஜி. வை. சகாயம் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார். சகல சமயங்களையும் சேர்ந்தவர்களின் கூட்டுப்பிரார்த்தனையுடன் விழா ஆரம்பித்தது

ஓய்வு பெற்ற அசைஸ் கமிஷனர் திரு. எம். டபிள்யூ. தலகொடப்பிட்டியா, பௌத்த மதம் பற்றிப் பேசுகையில் எவ்வாறு மனிதன் வாழ்வு முதல் இறப்பு வரை, கவலையும், நிலையாமையும் நிலவி வருகின்றன என்பதையிட்டுப் புத்தர் பெருமான் அறிவுறுத்தியுள்ளார் என்பதை எடுத்துக் காட்டினார். 'சுயநல ஆசைகளிலிருந்து மனிதன் தன்னை விடுவித்துக் கொள்வதே ஆத்ம விடுதலைக்கு வழியாகும்' என்று அவர் சுட்டிக் காட்டினார்.

கண்டி சட்ட வல்லுநர் சங்கத்தின் தலைவரான திரு. எஸ். எம். முஸ்தபா பேசுகையில் அல்லாவின் மீது நம்பிக்கையும், மனிதரிடையே சகோதரத்துவமும் மாறவில்லையென்பதை நபி நாயகம் வலியுறுத்தியுள்ளதாக கூறினார், அத்துடன், நபி நாயகம் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமைகள் வழங்க வேண்டுமென வற்புறுத்தினார்.

இந்து சமயம் பற்றி இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளரான திரு. எஸ். தனஞ்சயராஜசிங்கம் பேசினார். வேதங்கள், உபநிடதங்கள் தொடக்கம், பகவத்கீதையூடாக, பிரம்மத்தில் விடுதலை பெறும் தேவையை மனிதனுக்கு உணர்த்திய ஞானிகளின் போதனைகள் வரை, இந்து சமயத்தின் அடிப்படைக் கருத்துக்களை அவர் விளக்கினார்.

கண்டி திவ்ய ஜீவன சங்கத்தின் காரியதரிசி திரு. கே. வி. மயில்வாகனம் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார்.

செல்வி யோகா ராசையாவின் தலைமையில் நடைபெற்ற திவ்ய ஜீவன சங்கக் கோஷ்டியின் பஜனை சபையோரின் பாராட்டுதலைப் பெற்றது.

## காவலாளர் சங்கம் கோரிக்கை

கோப்பாய், வெள்ளி

1956-ம் ஆண்டுக்குப் பின் வேலையில் சேர்ந்த அரசாங்க காவலாளிகளுக்கு சிங்களத் தேர்ச்சியிலிருந்துவிதிவிலக்கு அளிக்கவேண்டும் என்னும் கோரிக்கை அடங்கிய மகஜர் ஒன்றை சமீபத்தில அகில இலங்கை அரசாங்க தேசிய பொதுக்காவலாளர் சங்கம் தூதுகோஷ்டியொன்றின்மூலம் யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலத்திடம் சமர்ப்பித்தது. இது குறித்து திரு பொன்னம்பலம் பதிலளிக்கையில், தாம் விரைவில் சம்பந்தப்பட்ட அமைச்சுடன் தொடர்புகொண்டு ஆவன செய்வதாகக் கூறினார்.

## இன்றைய பலன்

19-8-67
சனிக்கிழமை
[ஆவணி மாதம் 3-ம் திகதி]
நட்சத்திரம் - திருவோணம்பி. ப. 2-56 வரை. மேல் அவிட்டம்.
திதி சதுர்த்தசி பகல் 8-15 வரை மேல் பூரணை
சுபநேரம்-3-04—4-34
ராகுகாலம் 9-04—10-34.

மேடம்- சிந்தனை மிகுதி, வீண்வெறுப்பு.
ரிஷிபம்- அதிகார மேன்மை, ஆடம்பரம்.
மிதுனம்- உறக்கநிலை, வீண்பீதி.
கடகம்- விருந்துபசாரம், வெற்றி.
சிங்கம்- அவப்பெயர், அதிக செலவு.
கன்னி- பிதாவழிசுகம், தரும சிந்தை.
துலாம்- ஆக்கமுயற்சி ஆனந்தம்.
விருச்சிகம்- திறமைக்கு மதிப்பு, சுகம்.
தனுசு- மூளைக்குவேலை, மனச்சோர்வு.
மகரம்- இராசகவலை, இடர்பலவுண்டு,
கும்பம்- தனதானியச் சிறப்பு, உல்லாசம்.
மீனம்-மந்தநிலை, மனப் போராட்டம்.

—சோதிடக்கலாநிதி—
இருமலை வேலுப்பிள்ளை

## விஞ்ஞான வித்தியாதரிசி

புன்னாலைக்கட்டுவன், வெள்ளி

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரி ஆசிரியர் திரு. கே. நவரத்தினம் வவுனியாப் பகுதிக்கு, விஞ்ஞான வித்தியாதரிசியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கரவெட்டியைச் சேர்ந்த திரு. நவரத்தினம் லண்டன் பல்கலைக்கழக விசேட விஞ்ஞானப் பயிற்சி பெற்றவராவார்.

## தென்மராட்சி இசைவிழா

### இன்றைய நிகழ்ச்சிகள்

சாவகச்சேரி, சனி

தென்மராட்சி இசைக்கலை மன்றத்தின் பன்னிரண்டாவது ஆண்டு இசைவிழா நேற்று மாலை சாவகச்சேரி சந்திரசேகர வாரிவளநாதர் சிவன்கோவில் முன்றலில் யாழ். தலைமைக் காரியாதிகாரி திரு. ஆ. கந்தையா தலைமையில் ஆரம்பமாகியது. இவ்விழா தொடர்ந்து ஐந்துநாட்களுக்குநடைபெறும்.

விழாவின்இன்றைய நிகழ்ச்சிகள் வருமாறு: மாலை 7 மணி இசைக்கலை மன்ற மாணவிகள் பாட்டு, 7-30 மணி ஏ. ஜி. ஐயாக்கண்ணு தேசிகர் பாட்டு, 8-45 மணி கருத்துரை "சுருதியும் தாளமும்" ஏ. ஜி ஐயாக்கண்ணு தேசிகர், 9-00 மணி தலைமையுரை யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா, 9-15 திருமதி சத்தியபாமா இராசலிங்கம் பாட்டு, 10-30 திரு. பொன். சுந்தரலிங்கம் பாட்டு, 11-30 திரு. என். பி. பாலகிருஷ்ணன் பாட்டு.

## பஸ் சாரதி விடுதலை

வல்வெட்டித்துறை, வெள்ளி

இவ்வருடம் பங்குனிமாதம் 19-ம் திகதி பருத்தித்துறை டிப்போ பஸ் சாரதியான பி. சின்னத்துரை என்பவர் தான் ஓட்டிச்சென்றபஸ்ஸை டானியல் என்பவருடைய வீட்டு சுவருடன் மோதிச் சேதப்படுத்தியதாகக் குற்றம் சாட்டித்தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு கே. விக்னராஜா முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது. கண்டக்டர் வி. தேவசுந்தரம், எஸ். டானியல், கே. செல்லையா, சோ. கணேஸ்வரன் என்ற 14 வயது மாணவன் ஆகியோர் சாட்சியமளித்த பின்னர் மாஜிஸ்திரேட் எதிரியை சுற்றவாளியாகக்கண்டு விடுதலை செய்தார்.

## பெண் கைது

வல்வெட்டித்துறை, வெள்ளி

தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோவில் உற்சவத்தையொட்டி தற்காலிகமாகக் கடமையாற்றி வரும் சார்ஜன்ட் திரு. வடிவேலுவுக்குக் கிடைத்த இரகசியத் தகவலையொட்டிநேற்று இரவு கோவிலின் வெளிவீதி முன்பக்க மண்டபத்திற்குச் சென்றபோது மாணிக்கம் என்ற பெண் தான் வைத்திருந்த சாக்குப் பையினுள் போத்தலில் கள் வைத்துக் குடித்துக் கொண்டிருப்பதைக் கண்டனராம். பொலிசார் அவரைக் கைதுசெய்து மிகுதிக் கள்ளுடன் வல்வெட்டித்துறைப் பொலிசாரிடம் ஒப்படைத்தனர்.

## நாட்டிலும் நகரிலும்

எங்கள் பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகா அடிக்கடி எமக்கு கூறிவரும் புத்திமதிகளைப் பார்க்குமிடத்து நாம் தீவிரமாகச் சிந்திக்கவேண்டிய ஒரு கட்டம் ஏற்பட்டிருக்கிறதென்று நினைக்கவேண்டியிருக்கிறது.

சில வாரங்களுக்குமுன்னர் அவர் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில் என்ன சொன்னார்தெரியுமா? இலங்கையில் நெல் உற்பத்தி பெருகிக்கொண்டே வருகிறது. இன்னும் சில ஆண்டுகளுக்குள் வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதிசெய்யும அளவிற்கு நாம் வளர்ந்துவிடுவோம்—அப்படி என்று சொன்னார்.

இதைப் பத்திரிகையில் படிக்கப்படிக்க ஆனந்தம் சொட்டியது. அரை வயிறு சாப்பிட்டுவரும் நாம் இனிமேல் மூக்குமுட்டசாப்பிட்டுவிட்டு மீதியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்போகிறோம், என்ற செய்தியைக் கேள்விப்பட்டால் எந்தப் பரதேசிக்குத்தான் வயிறுபொருமாது?

பிரதமரின் இந்த மணிவாக்கை இவர் கேலி பண்ணவில்லை. உண்மையிலேயே ஒவ்வொரு வருடமும் எமது இலங்கைத்தீவில் நெல் உற்பத்தி அதிகமாகிக் கொண்டுதான்வருகிறது.

மஹா பராக்கிரம வாகு காலத்தில் இலங்கையின் வடக்கு, கிழக்கு நெல் களஞ்சியங்களிலிருந்துநெல் மூடைகள் இந்தியா முதலிய இடங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது உண்மை

மேனாட்டு ஆக்கிரமிப்பாளர் வந்து சேர்ந்தபின் இந்த செந்நெல் விளையும் நிலங்கள் கவனிப்பாரற்று ஒதுக்கப்பட்டன. தேயிலையும், றப்பரும். கோப்பியும், கொக்கோவும் மலைநாடுகளில் உற்பத்தியாக்கப்பட்டன. வெள்ளைக்காரன் விரும்பி வாங்கும் விளை பொருட்கள் இவை.

இன்றுவரை. இப்பொருட்களின் வருவாயைப் பொறுத்தே இலங்கையின் வளம் தங்கியிருந்தது.

சென்றவாரம் எமது பிரதமர் மீண்டும் ஓர் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

தேயிலை, றப்பர், தென்னம் பொருட்கள் முதலியவற்றிற்கு உலகச் சந்தையில் கிராக்கி குறைந்துவிட்டது. ஆகையால் இனிமேல் இலங்கையர் அவற்றைநம்பியிருக்கப்படாது,

இனிமேல் நெற் சாகுபடியில் தான் நாம் கூடுதலான கவனம் செலுத்தவேண்டும், என்றும் அவர்கூறியுள்ளார்.

இந்த வாககியங்களில் பெரியதோர் உள்ளர்த்தம் இருக்கிறது. அன்றாடம் நாம் சாப்பிடும் அரிசியை எதிர்நோக்கி ஒரு பெரும்நாட்டை எதிர்பார்த்திருக்கிறோம், அந்த நாட்டுடன் பகைத்துக் கொள்ள நேரிடின் அங்கிருந்துவரும் அரிசி நின்றுவிடும்.

தேயிலை, றப்பர் முதலிய பொருட்களுக்கு இப்பொழுது மலேசியா, இந்தியா, பர்மா, தாய்லந்து முதலிய பல நாடுகளுடன் நாம் போட்டிபோட வேண்டியிருக்கிறது. உலகச் சந்தையில், இப்பொருட்களின் விலை 'டப்' என்று குறைந்தவுடனே இலங்கையின் வெளிச்செலாவணியும் 'டப்' என்று விழுந்துவிடும்.

ஆகையினால் தான் பழையபடி நெல், உருளைக்கிழங்கு, வெங்காயம், மிளகாய் முதலிய உணவுப் பொருட்களை நாமே உற்பத்தி செய்து கொண்டால் தான் வெளிநாட்டு இறக்குமதிகளை எதிர்பார்த்துக்கொண்டிராமல் நாம் தனித்து நிற்க முடியும். — வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக அமைதிக்கு நேரடி அபாயமாக மேற்கு ஆசிய நிலைமை விளங்குகிறது

## டிட்டோ-நாஸர் ஒருமித்த கருத்து

கெயிரோ, ஆக. 18

மேற்கு ஆசிய நிலைமை, அந்தப் பிராந்தியத்திலும் பொதுவாக உலகிலும் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளதாக யூகோஸ்லாவிய ஜனாதிபதி டிட்டோவும், ஐக்கிய அரபுக் குடியரசு ஜனாதிபதி நாஸரும் தமது பேச்சுவார்த்தைகளின் இறுதியில் வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இந்நிலைமை, ஆக்கிரமிப்பின் விளைவாக ஏற்பட்டதென இரு தலைவர்களும் தமது கூட்டறிக்கையில்குறிப்பிட்டுள்ளனர். அரபு மக்களின் நியாயமான உரிமைகளுக்குப் பங்கம் விளைவிக்கும்வகையில் ஆக்கிரமிப்பு நடந்திருப்பதாக அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

### ஐ.நா.வின் பொறுப்பு

ஆக்கிரமிப்பின் விளைவுகளை அகற்றும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டிய தன் அவசியத்தையும் இரு தலைவர்களும் வலியுறுத்தினர். ஆக்கிரமிப்பாளர்கள் தமது ஆக்கிரமிப்பின் பயன்களை அனுபவிக்க அனுமதிக்கப்படக் கூடாதெனத்தெரிவித்த இரு தலைவர்களும், அப்படி அனுமதித்தால், அமைதியை விரும்பும் நாடுகளுக்கு ஓர் ஆபத்தான முன்மாதிரியாக அது விளங்குமென மேலும்குறிப்பிட்டுள்ளனர்.

இதைத்தடுப்பதில் ஐ.நாவுக்கும், மண்டலம் சார்பற்ற நாடுகளுக்குமுள்ள பெரும் பொறுப்பைத் தலைவர்கள் சுட்டிக்காட்டினர்.

### விருப்பம்

ஐ.அ.கு., சிரியா, ஈராக் நாடுகளின் தலைவர்களுடன் கடந்த சில தினங்களாகப் பேச்சுவார்த்தைகள் நடாத்திவிட்டு நேற்றுத்தாயகம் புறப்பட்ட யூகோஸ்லாவிய அதிபர் டிட்டோ, அந்த நாடுகள், மேற்கு ஆசியாப் பிரச்னைக்குஓர் அரசியல்தீர்வு காண விருப்பம் தெரிவித்துள்ளதாகக் கூறினார்.

ஆனால் இந்த அரசியல் தீர்வின்விபரங்களை டிட்டோ வெளியிட மறுத்துவிட்டார். அரசியல் தீர்வுக்கான நடவடிக்கைகளையிட்டுத் தாம், சம்பந்தப்பட்ட அரபு நாடுகளின் தலைவர்களுடன் ஆராய்ந்ததாக மட்டும் அவர் தெரிவித்தார்.

### நம்பிக்கை

அரபுத் தலைவர்களுடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகளையிட்டுத் தாம் நம்பிக்கையுணர்வோடு தாயகம் திரும்பிச்செல்வதாக யூகோ அதிபர் டிட்டோ கூறினார்.

யூகோஸ்லாவியா வரும்படி ஐ.அ.கு. ஜனாதிபதி நாஸருக்கு டிட்டோ விடுத்த அழைப்பை நாஸர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

## அணு ஆயுதமற்ற நாடுகள் மாநாடு

### சீனு பங்குபற்றும்

புதுடில்லி, ஆக. 18

சீனு உட்பட மற்றும் அணு ஆயுத உற்பத்திசெய்யும் நாடுகளை அணு ஆயுதமற்ற நாடுகள் மாநாட்டுக்கு அழைப்பதற்கு, அம்மாநாட்டு ஆயத்தக் கமிட்டி உடன்பட்டுள்ளது.

இம்மாநாடு அடுத்த ஜூலை மாதத்திற்கிடையில் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அணு ஆயுதமற்ற நாடுகளை எதிர்நோக்கியுள்ள பாதுகாப்புப் பிரச்னைகள் அந்நாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பு ஆகிய விஷயங்களையிட்டு இம்மாநாடு ஆராயும்.

## பரக்தாத் மாநாடு

பாக்தாத், ஆக. 18

பாக்தாத்தில் கூடியுள்ள அரபு நாட்டுப் பொருளாதார, எண்ணை மந்திரிகளின் மாநாடு நேற்று மூன்றாவது நாளாகத் தொடர்ந்து நடைபெற்றது.

அரபு நாடுகளிலுள்ள பிரிட்டிஷ், அமெரிக்க எண்ணை நிலையங்களைத் தேசிய மயமாக்க வேண்டுமென்ற யோசனையை இம்மாநாட்டில் ஈராக் சமர்ப்பித்தது.

அத்துடன் மூன்று மாத காலத்திற்கு எண்ணை உற்பத்தியை ஒரேயடியாக நிறுத்திவிட வேண்டுமெனவும் ஈராக் ஆலோசனை தெரிவித்தது.

## பாரதி விழா நடத்த முடிவு

ஊர்காவற்றுறை, வெள்ளி

அடுத்த மாத முற்பகுதியில் பாரதிவிழாக் கொண்டாட சரவணை சனசமூக நிலையத்தினர் தீர்மானித்துள்ளனர்.

## ரஷ்ய தூதரகத்தை சீனர் தாக்கினர்

### காரும் தீ வைப்பு

பீகிங், ஆகஸ்ட் 18

பீகிங்கிலுள்ள சோவியத் தூதரகத்தை நேற்றிரவு ஆயிரக்கணக்கான சீனஆர்ப்பாட்டக்காரர் தாக்கியுள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டக்காரர் சோவியத தூதரக வளவிற்குள் பிரவேசித்து, தூதரகத்தின் ஒரு பகுதிக்குள் நுழைந்து, அங்குள்ள தஸ்தாவேஜுகளுக்குத தீ வைத்தனர்.

### ஜன்னல்களை உடைத்தனர்

தூதரகத்தின் கட்டிடத்தின ஜன்னல்களை ஆர்ப்பாட்டக்காரர் உடைத்தனர், ஆனல், அடித்து நொறுக்கிப் பலவந்தமாகக் கட்டிடத்தினுள் அவர்கள் நுழையவில்லை.

இதற்கு முன்னதாக,பீகிங் நகரத்தின் மத்தியில், சோவியத் தூதரகத்துக்கு முன்னலேயே சோவியத் தூதரகக் கார் ஒன்றை ஆர்ப்பாட்டக்காரர் நெருப்பு வைத்துக் கொளுத்தினர்.

### ரஷ்யா ஆட்சேபம்

இச்சம்பவங்களின் போது, சீனப் பொலிஸாருக்குத் துணையாகச் சீன ராணுவத்தினர் அனுப்பப்பட்டபோதும், அவர்கள் இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டு வாளாவிருந்ததாகச் சோவியத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன

தூதரகத் தாக்குதலை ஆட்சேபித்து சோவியத் யூனியன் சீனவிடம் குறிப்பு அனுப்பியுள்ளது.

## அமெரிக்க பி-52 விமானங்கள் வட வியட்னமை தாக்கின

### சீன எல்லைத்தாக்குதல் பற்றி பிரிட்டிஷ் பிரதமர் கருத்து

சைகோன், ஆகஸ்ட் 18

இம்மாதத்தில் முதற் தடவையாக நேற்று அமெரிக்க பி—52 குண்டுவீச்சு விமானங்கள், வட வியட்னமிலுள்ள இலக்குகளைத் தாக்கின.

இதற்கிடையில், வடவியட்னமிலுள்ள சீன எல்லையில் அமெரிக்க விமானங்கள் தாக்குதல் நடாத்துவதால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களைக் குறைக்கும் வழிவகைகளை அமெரிக்க விமானப் படை கண்டுபிடித்துள்ளதாக அமெரிக்கராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### வில்சன் கருத்து

அண்மையில வடவியட்னமில், சீன எல்லையோரமாக அமெரிக்க விமானங்கள் குண்டு வீசியது, அமெரிக்காவின் வியட்னமின் கொள்கையில் எவ்வித மாற்றத்தையும் குறிப்பதாகத் தாம் கருதவில்லையென பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹரோல்ட் வில்சன் லண்டனில் கூறியுள்ளார். என்றாலும், அமெரிக்காவின் சமீபத்தைய போர் நடவடிக்கையையிட்டுத் தாம் அமெரிக்காவுடன் தொடர்புகொண்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் காமென்ஸ் சபையில், இடதுசாரித் தொழிற்கட்சி அங்கத்தவர்கள் சிலரின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே பிரிட்டிஷ் பிரதமர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

### திருப்தி இல்லை

ஆனல், பிரிட்டிஷ் பிரதமரின் பதில் தமக்குத்திருப்தியளிக்கவில்லையென அந்த இடதுசாரி தொழிற்கட்சி அங்கத்தவர்கள் குழு அபிப்பிராயம் தெரிவித்துள்ளது.

வாஷிங்டன், ஆக. 18

அமெரிக்காவில் இரண்டு நகரங்களில் நேற்று மீண்டும் இனக் கலவரங்கள் தோன்றின. சிகாக்கோ, காஸ்டன் ஆகிய இரு நகரங்களிலுமே இனக் கலவரங்கள் நடைபெற்றன. இப்போது நிலைமை கட்டுக்கடங்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ. நா. விடம் பியாவ்ரா வேண்டுகோள்

லாகோஸ், ஆக. 18

நைஜீரியாவின் பிரிவினைப் பகுதியான 'பியாவ்ரா', சமஷ்டி அரசுக்கு பிரிட்டிஷ் இராணுவ உதவி கிடைப்பதைத் தடுத்து நிறுத்தும்படி, ஐ. நா. சபைக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுபற்றி என்ன நடவடிக்கைகள் எடுக்கலாம் என்பது பற்றி ஐ நா. பொதுக் காரியதரிசி, யு தாண்ட் ஆலோசித்து வருவதாக ஐ. நா. பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## ஜெனேவாத் துறைமுகத்தில் உள்ள சீனக் கப்பல்

### தண்ணீர் தருவதற்கு அதிகாரிகள் மறுப்பு

ஜெனேவா, ஆக. 18

இத்தாலியிலுள்ள ஜெனேவா துறைமுகத்தில் நிற்கும் சீனக்கப்பலுக்குப் புதிய நீர் அளிக்க இத்தாலிய துறைமுக அதிகாரிகள் நேற்று இரண்டாவது தினமாக மறுத்துள்ளனர்.

இச்சீனக்கப்பல் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் ஏறத்தாழ முற்றுகைக்குள்ளாகியுள்ளது. இக்கப்பலினுல் தனது சரக்குகளை இறக்கவும் முடியவில்லை, வெளியிலிருந்து சப்ளைகள் எடுக்கவும் முடியவில்லை.

இந்தச் சீனக்கப்பல், பிரச்சார அட்டைகளைத் தாங்கியிருந்தது. அந்த அட்டைகளை நீக்கிவிடும்படி துறைமுக அதிகாரிகள் உத்தரவிட்டும், சீனக்கப்பலின் காப்டன் அதற்கு இசையவில்லை. இதைத் தொடர்ந்தே, இத்தாலிய துறைமுக அதிகாரிகள் முற்றுகைநடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர்.

இத்தாலிய சட்டத்தின்படி, கப்பலில் பிரச்சார அட்டைகளைத் தொங்கவிடுவது ஒரு குற்றமாகும்.

## இந்தியாவின் நட்புறவை சீனு விரும்பவில்லை

### டோக்கியோவில் திரு. தேசாய்

டோக்கியோ, ஆக. 18

ஜப்பானில் தற்போது விஜயம் செய்யும் இந்திய துணைப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய்,நேற்று ஜப்பானிய வெளியுறவு மந்திரி திரு. மிக்கியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

உலகில் சீனு ஆதிக்கம் செலுத்துவதற்காக முயற்சி செய்வதையிட்டுத் தமது வருத்தத்தை திரு. தேசாய், இப்பேச்சுவார்த்தைகளின் போதுவெளியிட்டார்.

### சீனு விரும்பவில்லை

சீனுவுடன் இந்தியா நட்புறவு பூண்டு வாழவே விரும்புவதாகவும், ஆனல் சீனு அப்படி வாழவிரும்பவில்லையென்றும், இதன் விளைவாக இந்தியா மிகவும் கண்காணிப்புடன் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் திரு. தேசாய், திரு. மிக்கியிடம் தெரிவித்தார்.

## கிருஷ்ணு-கோதாவரி நதிப்பிரச்னை பற்றி பேச்சுவார்த்தைகள்

### 3 ராஜ்ய முதல் மந்திரிகள் பிரதமர் இந்திராவுடன் சந்திப்பு

புதுடில்லி, ஆகஸ்ட் 18

ஆந்திரப் பிரதேசம், மைசூர், மகா ராஷ்டிரம் ஆகிய மூன்று ராஜ்யங்களுக்குமிடையேயுள்ள கிருஷ்ணு-கோதாவரி ஆற்று நீர்ப் பிரச்னை பற்றி நேற்றுப் புதுடில்லியில் தொடர்ந்துபேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

மத்திய போக்குவரத்து நீர்ப்பாசன மந்திரியான டாக்டர் கே. வி. ராவ், மூன்று ராஜ்யங்களின் நீர்ப்பாசன மந்திரிகளையும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடாத்தினர்.

### பிரதமர் சந்திப்பு

இதற்கிடையில், பிரதமர் திருமதி இந்திராகாந்தி, ஆந்திரா, மைசூர், மகாராஷ்டிர முதல் மந்திரிகளுடன் நதிப் பிரச்னையையிட்டுக் கலந்தாலோசித்தார். இம்மூன்று முதல் மந்திரிகளும் பிரதமர் இந்திராவின் அழைப்பின் பேரிலேயே புதுடில்லி வந்தனர்.

சுமார் மூன்றரை மணித்தியாலங்களாக நடைபெற்ற இப்பேச்சுவார்த்தைகளின் பயனுக, மூன்று ராஜ்யங்களுக்குமிடையே பிரச்னையைப் புரிந்துகொள்ளும் சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

மூன்று முதல் மந்திரிகளும் அடுத்த மாதம் பிரதமரை மீண்டும் சந்தித்துப் பேசுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர். இந்த இணக்கம் பேச்சுவார்த்தைகளின் வெற்றிக்கு ஓர் அறிகுறியாகுமெனக் கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'காரணமின்றி'

# மாணவிகளை ஆசிரியைகள் கூட்டிச் செல்லக்கூடாது'

கொம்பனித்தெரு, வெள்ளி

பள்ளி ஆசிரியைகள் இனி மாணவிகளை காரணம் எதுவுமின்றி வெளியே அவர்களை கூட்டிச் செல்ல முடியாதபடி கல்வி அமைச்சிடமிருந்து ஓர் உத்தரவு அனுப்பப்படவிருக்கிறது. பெண் பாடசாலை அதிபர்களுக்கும் பெண்கள் விடுதிப்பொறுப்பாளர்களுக்கும் இந்த உத்தரவு வெகு விரையில்போய்ச் சேருமெனத் தெரியவருகிறது.

பள்ளிங்கூடங்களில் கல்வி கற்கும் இளம் ஆசிரியைகள் தாங்கள் வெளியில் செல்லும் பொழுது தங்களுக்குத் துணையாக மாணவிகளையும் கூட்டிச் செல்வதாகவும் இதனால் மாணவிகளும் ஆசிரியைகளின் போக்குகளுக்கு உந்தப்பட்டு கெட்ட முறையில் நடந்துகொள்கின்றார்களெனவும் அமைச்சுக்குக் கிடைத்த புகார்களைக் கொண்டு ஆசிரியைகள் தாங்கள் வெளியில் செல்லும் பொழுது மாணவிகளை காரணமின்றிவெளியில் கூட்டிச் செல்லவோ அனுமதியளிக்கக்கூடாதென பெண்கள்பாடசாலை அதிபர்களையும் பெண்கள் விடுதிப்பொறுப்பாளர்களையும் கேட்டுக் கொள்ளும் இந்த உத்தரவு விரைவில் அனுப்பப்படவிருப்பதாகத் தெரிகிறது.

## தீவுப் பகுதி எம். பி.யிடம் முறையீடு

ஊர்காவற்றுறை, வெள்ளி

சரவணை சனசமூக நிலையத்தைச் சேர்ந்த தூது கோஷ்டியினர் தீவுப் பகுதி எம். பியிடம் சென்று சரவணைக்கு ரூட் பஸ்சேவை நிறுத்தப்பட்டிருப்பதையிட்டுப் புகார் கூறியுள்ளனர்.

திரும்பவும் இப் பாதையில் பஸ் ஓடவிடப்பட வேண்டுமென இக் கோஷ்டியினர் எம். பி. யிடம் கேட்டுக் கொண்டனர்.

சரவணை நாகேசுவரி வித்தியாசாலை விஸ்தரிப்புச் சம்பந்தமாக எம். பி காட்டிய சிரத்தையை பிரஸ்தாப கோஷ்டியினர் பாராட்டியதுடன் சரவணை கிராம நலத்தில் கவனம் செலுத்த வேண்டுமெனவும் அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

## ஒரு வருடச் சிறை

ஊர்காவற்றுறை வெள்ளி

நாரந்தனை வாசியான தளையசிங்கம் பெண் புஷ்பம் என்பவரின் வீட்டினுள் திருடும் நோக்கத்துடன் பிரவேசித்தார் என எழுவைதீவைச் சேர்ந்த சின்னத்தம்பி குலசேகரம் என்பவர் மீது தொடரப்பட்ட வழக்கில் எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட நீதிபதி திரு. எம். ஜமீல் ஒருவருட சிறைத் தண்டனையும் இரண்டு வருட பொலிஸ் கண்காணிப்பும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

## ஆறு மாதம் கடுழியம்

ஊர்காவற்றுறை, வெள்ளி

காரைநகர் வடக்கு வாசியான அம்பலவாணர் சின்னத்துரை என்பவரைக் காலால் உதைத்துக் காயப்படுத்தியதாகக் குற்றஞ்சாட்டி அவரது மருமகனை நாகலிங்கம் மார்க்கண்டு மீது தொடரப்பட்ட வழக்கு சென்றவாரம் நீதிபதி திரு. ஜமீல் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. விசாரணையின்பின் எதிரிக்கு ஆறு மாதக் கடுழியச்சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

எதிரி முன்னரும் குற்றப்பட்டவர் என்பதை ஒப்புக் கொண்டார்.

## 24-வது ஆண்டு பொதுகூட்டம்

கொழும்பு, வெள்ளி

காரைநகர் அபிவிருத்திச் சபையின் 24-வது ஆண்டுப் பொதுக் கூட்டம்இம்மாதம் 20-ம் திகதி மாலை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் சபைத் தலைவர் திரு வே. தில்லைநாதன் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

காரைநகர் குழாய் நீர்த் திட்டம் பற்றி ஒரு விரிவான திட்டத்தை தயாரித்து அரசாங்கத்திற்கு அளிக்கவும், காரைநகரில் நிறுவத் திட்டமிடப்பட்டிருக்கும் நவீன தபாற் கந்தோரினை விரைவில் பூர்த்தியாக்க அவ்வேலைகளைத் துரிதப்படுத்தவும் இக் கூட்டத்தில் ஆலோசனைகள் மேற்கொள்ளப்படும்எனக் காரை அபிவிருத்திச் செயலாளர் திரு. க. க. சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

## பண்டிதருக்கு பாராட்டு

சங்கானை, வெள்ளி

கிளிநொச்சி எம். பி. பண்டிதர் க. பொ. இரத்தினம் அண்மையில் தமிழகம் சென்று தமிழ் வளர்ச்சிக்கான ஆக்கப் பணியில் உழைத்தமையைச் சங்கானை இந்து வாலிபர் மன்றம் பாராட்டியுள்ளது

"கலைச்சொற்கள் நாட்டிற்கு நாடு வேறுபடுவதால் பாடநூல்கள் தயாரித்தல், சஞ்சிகைகள் வெளியிடுதல், முதலியவற்றில் பல இடர்ப்பாடுகள் ஏற்பட்டுள்ளன. தமிழ் பேசும் நல்லுலகெங்கும் ஒரே வித கலைச் சொற்கள் இருக்கவேண்டியது மிக மிக அவசியம் இதனையுணர்ந்து பண்டிதர் இரத்தினம் பொதுக்கலைச் சொல்லாக்கத்திற்காகத் தமிழக அமைச்சர்களைக்கண்டு பேசி ஆவன செய்துள்ளார் என்று அந்தப்பாராட்டுச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "பெயரை மாற்றி தருக"

சுழிபுரம், வெள்ளி

பனிப்புலம்- காலையடி அமெரிக்கன் மிசன் பாடசாலையை அம்பாள் வித்தியாசாலை எனபெயர்மாற்றித் தரும்படி பனிப்புலம் அம்பாள் சனசமூக நிலையத்தினர் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கத்திடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.

நாளை

## காரைநகருக்கு மந்திரி செல்வார்

காரைநகர், வெள்ளி

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ள தபால தந்தி, போக்குவரத்து அமைச்சர் மேஜர் மெண்டேறு ஜெயவிக்கிரமா இம்மாதம் 20-ம் திகதி நண்பகல் 12 மணிக்கு காரைநகர் புதிய தபால் நிலையக் கட்டடத்துக்கான அத்திவாரக் கல்லை நாட்டுவார்.

## ஆண்டு விழா

சங்கானை, வெள்ளி

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக்கழக 11—வது ஆண்டுவிழா இம்மாதம் 19ந் திகதி சனிக்கிழமை மேற்படி கழக மட்டபத்தில் நடைபெறவிருக்கிறது. பண்டிதை செல்வி தங்கம்மா-அப்பாக்குட்டி, செல்வி ஆர். சோமசுந்தரம் ஆகியோரின்சொற்பொழிவுகள் நடைபெறும்.

## ஆட்டிறைச்சி கிடைக்கும்

புலோலி, வெள்ளி

புலோலி கிராமசபை எல்லைக்குள் ஆட்டிறைச்சிக் கடையொன்று நிறுவப்படவிருக்கிறது. புலோலிகிராம சபை எடுத்துக்கொண்ட நடவடிக்கையைத் தொடர்ந்து ஆட்டிறைச்சிக்கடை நிறுவப்படவிருக்கிறது.

## புதிய நிர்வாகிகள்

சுழிபுரம், வெள்ளி

அரசடி சனசமூக நிலைய வருடாந்தப்பொதுக் கூட்டம் திரு. க. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது. நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: சபா. நாராயணன். உபதலைவர்: ச. மகேந்திரன் காரியதரிசி: இ. தணிகாசலம், உபகாரியதரிசி: பே. இராசரத்தினம், தனாதிகாரி: த. ஆறுமுகதாசன், நூல் நிலையப் பொறுப்பாளர் ஆ தங்கராசா.

7பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

ஃ ஃ ஃ

மண்டைதீவு, புதன்.

மண்டைதீவு வள்ளுவன் சனசமூக நிலையத்தின் வருடாந்தப்பொதுக் கூட்டம் திரு. இ, கந்தையா தலைமையில் நடைபெற்றது. புது வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. இ. கந்தையா, உபதலைவர்: திரு. வ. கணபதிப்பிள்ளை, செயலாளர்: திரு: ம. ஞானப்பிரகாசம், உபசெயலாளர்: திரு. க. ஆனந்தராசா, பொருளாளர் திரு. பொ. அற்புதராசா, நிர்வாக பரிசோதகர்: திரு. பாலசிங்கம். 8பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

கிளிநொச்சி

# குழாய் நீர்விநியோகம் என்ன நிலையிலிருக்கிறது?

## உள்ளூராட்சி அமைச்சரிடம் பண்டிதர் இரத்தினம் கேட்கிறார்

யாழ்ப்பாணம், சனி

கிளிநொச்சி குழாய் நீர் விநியோகத்துக்கு அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதா என்றுகிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வத்துக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் கேட்டுக் கொண்டுள்ளார்.

திரு. இரத்தினம் தமது கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

கிளிநொச்சிப் பகுதிக்கு குழாய் நீர் வசதி செய்து தருமாறு கடந்தஇரு ஆண்டுகளாக வற்புறுத்தி வந்துள்ளேன். நீங்களும் நடவடிக்கை எடுப்பதாகப் பல முறை தெரிவித்திருக்கிறீர்கள், ஆனால் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அடுத்த ஆண்டுவரவு செலவுத் திட்டத்தில் இதற்கான பணம் ஒதுக்கப்படாவிட்டால் அடையாள மான்ய பணத்தை குழுநிலையிலாவது சேர்க்க நடவடிக்கை எடுக்கவும்.

## பூட்டப்பட்டு ஐந்து மாதம

கொம்பனித்தெரு, வெள்ளி

கொம்பனித்தெரு றைபிள் வீதி உப-தபாற்கந்தோரில், தபாற் பகுதி அதிகாரிகள் திடீர் பரிசோதனை நடாத்திப் பல நூற்றுக்கணக்கான ரூபாய்கள் குறைந்து இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அங்கு கடமையாற்றிய உதவித் தபாலதிபரை தற்காலிகமாக வேலைநீக்கம் செய்ததோடு தபாற்கந்தோரையும் பூட்டி ஐந்து மாதங்களாகிவிட்டன. இன்னும் பூட்டிய தபாற்கந்தோர் திறக்கப்படாததால் கொம்பனித்தெரு வாசிகள் பெருத்த கஷ்டத்துக்குள்ளாகி உள்ளனர். இதுசம்பந்தமாகப் பலமுறை தபால் மா அதிகாரிக்குப் புகார்செய்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையாம்

## எச்சரிக்கையாக இருங்கள்

சாவகச்சேரி, வெள்ளி

சென்ற போயாதினத்தன்று இரவு8-30 மணிவரை சாவகச்சேரியில் கடைகளைத் திறந்து வைத்திருந்தோர் அதிகாரியிடம் வகையாகச் சிக்கிக்கொண்டனர். சாவகச்சேரியிலுள்ள பல கடைக்காரர்கள்மீது சாய்ப்புச்சட்டத்தை மீறிக் கடைகளைத் திறந்ததாகக்குற்றஞ்சாட்டி வழக்குத் தொடரப்படவிருக்கிறது.

## கரவெட்டியில் அமைச்சர்

புன்னாலைக்கட்டுவன்வெள்ளி

தபால் தந்திப்போக்குவரத்து அமைச்சர் திரு. மொண்டேகு ஜெயவிக்கிரமாவுக்கு கரவெட்டி தபால் கந்தோர் ஊழியர் இன்று காலை ஒரு வரவேற்பளித்தனர்.

தபாற்கந்தோருக்கு நவீன வசதிகள் அமைத்துக்கொடுப்பதாகவும், மேலதிய ஊழியரை நியமித்துத் தருவதாகவும் அமைச்சர் கூறினார்.

## காளிமுத்து சிறையில் சொற்பொழிவு கேட்டார்

புன்னாலைக்கட்டுவன், வெள்

உரும்பராய் இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. இ. நவரத்தினக் குருக்கள், கண்டி போகம்பரை சிறைச் சாலைக்கைதிகளுக்கு "மதமும் ஒழுக்கமும்" என்றவிடயம் பற்றி கடந்த ஞாயிறு உரை நிகழ்த்தினார். மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளுக்கு "யாக்கை நிலையாமை" பற்றி விசேட சொற்பொழிவு நிகழ்த்தினார். மரணதண்டனைபெறவிருக்கும் காளிமுத்து, மிகக் கவனமாக இச்சொற்பொழிவைக் கேட்டாராம். ஆனைக்கோட்டைக் கொலை வழக்கில் குற்றவாளியாகக் கண்டு இவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

## பருத்தித்துறை எம். பி. ஒளி கொடுத்தார்

புன்னாலைக்கட்டுவன், வெள்

கடந்த செவ்வாய் பிற்பகல் யாழ்ப்பாணம் நோக்கி வந்த 'உத்தரதேவி'யில் சில பெட்டிகளில், பல்புகள் காணப்படாததால் எங்கும் இருள் மயமாக இருந்ததாம். இவ்வண்டியில் பிரயாணம் செய்த பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் அனுராதபுரி நிலையஅதிபருடன் தொடர்புகொண்டு புதிய பல்புகள் போடுவித்து ஒளியீந்தாராம்.

## திருட்டு முயற்சி தோல்வி

புன்னாலைக்கட்டுவன், வெள்

ஊரெழுவில் இரவு நேரத்தில் சில திருடர்கள் ஒருவீட்டில் ஓடுகளைப்பிரித்து இறங்கித்திருட முயன்றபோது வீட்டுக்காரர் விழித்துக் கொண்டதைத் தொடர்ந்து முன் கதவால் திருடர் தப்பி விட்டனர். இவர்கள் ஒரு 'டாக்சி'யில் வந்ததாகத் தெரிகிறது.

சுன்னாகம் பொலிசாரும் தொண்டர் படையினரும் கிரமமாக ரோந்து சுற்றுகின்றனர்.

# நெடுந்தீவில் இவர்களை காணாது தவிக்கிறார்கள்

நெடுந்தீவு, வெள்ளி

நெடுந்தீவு மீனவர்கள் அந்தோனி சிங்கராசர், அந்தோனி எஸ்தாக்கி, சந்தியா பத்திராசன் ஆகிய மூவரும் நேற்றுக்காலை நெடுந்தீவிலிருந்து கட்டுமரமொன்றில் ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்றார்கள். ஆனால் இவர்கள் இன்னும் கரைவந்து சேரவில்லை. நேற்று வீசிய கடும் காற்றுக்கும் கடல் கொந்தளிப்புக்குமிடையே சென்ற இவர்களுக்கு என்ன நடந்திருக்குமோ வென அவர்களின் பெற்றோரும் உறவினர்களும் அச்சமடைந்துள்ளனர். இவர்களைத் தேடிச் சென்ற [illegible] லிருந்து இன்னும் எவ்வித தகவல்களும் வந்து சேரவில்லை. இம் மூவரில் அந்தோனி எஸ்தாக்கி என்பவருக்கு நீந்தத் தெரியாதாம். இவருக்கு என்ன நடந்திருக்குமோ எனக் கவலைப்படுகிறார்கள். இது விஷயமாக யாழ். அரசாங்க அதிபருக்கும் காரைநகரில் இருக்கும் கடற்படை அதிகாரிக்கும் தந்தி மூலம் செய்தி அனுப்பப்பட்டுள்ளது. நேற்று வீசிய கடும் காற்றும் கடல் கொந்தளிப்பும் இன்று மிகவும் அமைதியாய் இருப்பதால் இவர்களைத் தேடப் [illegible]

பூஜைக்கு - அபிஷேகத்துக்கு

தேவையான

பொருட்கள்

கிடைக்குமிடம்

சுந்தரம் பிறதர்ஸ்

மருந்துக்கடை

[புதிய பஸ்நிலையத்துக்கு அருகாமை]

73, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளம்பரம

### தமிழ்நாடக எழுத்துப் போட்டி, 1967

முடிவுத் திகதி 31-8-1967

செயலாளர்,
இலங்கைக் கலைக்கழகம்,
135, தர்மபால மாவத்தை,
61 கொழும்பு—7

### தேவை

புத்துவெட்டுவான் மணற்குளம் ப. நோ. கூ. சங்கத்திற்கு மனேச்சராகக்கடமையாற்றுவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. (மனேச்சராகவும் வியாபாரியாகவும்).

1. தராதரம்:- J. S. C. கூட்டுறவுப் பயிற்சி பெற்றவராக இருக்கவேண்டும்.

2. வயது:- 25-45வரை.

3. பிணை:-
ரொக்கம் 1000-00
ஆதனம் 2000-00

4. சம்பளம்:- 100—150

2 1/2 X 10—5 X 5

வியாபார அனுபவமுடையவருக்கும் கூட்டுறவுப் பயிற்சிஉடையவருக்கும்முக்கிய இடம் கொடுக்கப்படும். விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி 23-8-67-ல் காரியதரிசி, புத்துவெட்டுவான், மணற்குளம் ப. நோ கூ. சங்கம், புத்துவெட்டுவான், கிளிநொசசி என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

சி. பரமேஸ்வரன்.
கௌரவ காரியதரிசி.
பு. ம. ப. நோ. கூ. ச.

86

### அரசாங்க கேள்விகள்
### சிறைச்சாலைப் பகுதி

என் 2393 - 1967 - 68-ம் ஆண்டிற்கு யாழ்ப்பாணச் சிறைச்சாலைக்கு, மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, கோழியிறைச்சி, ஆகியவை கொடுத்தல்.

### மதுவரிப்பகுதி

சாராயமும் மற்றும் பொருட்களும் ஏற்றிச் செல்வதற்கு கேள்விப் பத்திரங்கள்-
வவுனியா சாராயக்குதம்- 1967/68

என் 2367 - வவுனியா சாராயக்குத்திற்கும் அவ்வூரி புகையிரதப்பகுதி பண்டகசாலைக்குமிடையில் சாராயமும்மற்றும்பொருட்களும் ஏற்றிச்செல்வதற்காகிய கேள்விகள் முடிவு திகதி 7-9-67.

### அரசாங்க கேள்விகள்
### கல்வித் திணைக்களம்

என் 2354 - யா/கனிட்ட தொழில் பாடசாலையில் [யாழ்ப்பாணம்] கட்டிடங்களை விஸ்தரித்தல். கேள்விகள் முடிவு திகதி 8-9-67.

### சௌக்கிய திணைக்களம்

என் 2356 - 1967/68-ம் ஆண்டில் யாழ்ப்பாணப் பிரிவிலுள்ள நிலையங்களுக்கு இருப்புப்பொருட்களை ஏற்றி இறக்குவதற்கான கேள்விகள் முடிவு திகதி 13-9-67.

இதன் முழுவிபரங்களுக்கும் 18-8-67 இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் I-ம் பகுதி, II-ம் தொகுதியைப் பார்க்கவும். இதன் பிரதிகளைச் சகல கச்சேரிகளிலும் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தர் ந்தோர்களிலும், தபாற்கந்தோர்களிலும் உபதபாற்கந்தோர்களிலும், புகையிரத நிலையங்களிலும் பார்வையிடலாம்.

G. P. 4623


**மனோஹரா**
[யாழ்ப்பாணம்]
பி. ப. 4-45, 7-00, 9-45.
Horst Bucholz
Sylva Koscina
in
THAT MAN IN ISTANBUL
(Secret Agent Film)

**ராஜா RAJAH**
யாழ்ப்பாணம் JAFFNA.
தினசரி 2-30, 6-30, 930
ஏ. வி. எம்; ராஜன்
கே. ஆர். விஜயா
நடித்த
மனம் ஒரு குரங்கு

**2-வது வெற்றி மாதம்!**

லிங்ஸ்லி [கொட்டாஞ்சேனை] — பிளாஸா [வெள்ளவத்தை]
விஜிதா [ஹட்டன்] — வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [மட்டக்களப்பு] — மொடேர்ன் [பதுளை]

தென்னகமெங்கும் வெற்றி எட்டுத்திக்கு மெட்ட கொட்டுமுரசு கொட்டி 100 நாட்களுக்கு மேல் ஓடிய எழில் வண்ண ஓவியம்!
புதுமை நிறைந்த பொழுதுபோக்குச் சித்திரம்
மக்கள் திலகம் எம். ஜி. ஆர்.—சரோஜாதேவி
அசோகன் - நாகேஷ் - மனோரமா - ராமதாஸ்
ரி. ஆர். ராமச்சந்திரன் - மாதவி
நடித்த




ஏவி. எம் புரொடக்ஷன்ஸ்
அன்பே வா
(ஈஸ்ட்மென் கலர்)
கதை, டைரெக்ஷன்: ஏ. ஸி. திரிலோகசந்தர்
இசை மெல்லிசை மன்னர் எம். எஸ். வி...


### யாழ்ப்பாண மாநகரசபை
### ஏல விற்பனை

கச்சேரி பஸ் நிலையத்தில் நிற்கும் மகோகனி மரம் இம்மாதம் 25-ந் திகதி மு. ப. 10-30 மணிக்கு அவ்விடத்திலேயே வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும் ஏற்றுக்கொள்ளப்படும்கேள்விக்காரர் முழுப்பணத்தையும் உடனே செலுத்தி மரத்தை ஒருவார காலத்திற்குள்அப்புறப்படுத்தல்வேண்டும். மேலும் விபரம் மாநகர மராமத்து பொறியியலாளரிடம் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கட்சன் செல்வராசா.
மாநகர ஆணையாளர்.
15-8-67. 85

## சிறுகதை போட்டி

தெல்லிப்பளை, வெள்ளி
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர்களிடையே ஒரு சிறுகதைப் போட்டியை நடத்துவதென, ஏழாலையிலுள்ள யாழ். இலக்கிய நண்பர்கள் கழகக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

### ஆங்கிலத்தில் அலுவல்கள்

கோப்பாய், வெள்ளி
கோப்பாய் கிராமசபை அதன் சகல அலுவல்களையும் ஆங்கிலத்திலேயே நடத்திவருவதாகப் பொதுமக்கள் குறைபட்டுக்கொள்கிறார்கள்.

### சாவகச்சேரி நகரசபை தேர்தல்

சாவகச்சேரி, வியாழன்
சாவகச்சேரி கிராம சபை தேர்தல் இவ்வருடம் டிசம்பர் மாதத்தில் நடைபெறும் எனத் தெரிய வருகிறது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

சனி19-8-67

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-25 தினக்குறிப்பு, 7-30 குரல்வகை, 7-45 மெல்லிசை 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

844 மீற்றர் & 49 மீற்றர்
பகல்12-00 தொழிலாளர் வேளை, 1-00 கதம்பஇசை.

344 மீற்றர் & 61 மீற்றர்
மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர் மன்றம்.

இரவு 6-15 வயலின்— பரமேஸ்வரி சச்சிதானந்தம், 6-45 கிராம சஞ்சிகை, 7-15 செய்திச் சுருள், 7-30 குங்குமம்— மாதர் நிகழ்ச்சி, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 உரைச் சித்திரம், 10-00 நேயர் விருப்பம்.


**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30
ஜெய்சங்கர்-ஜெயலலிதா
நடித்த
நீ

**REGAL JAFFNA**
Time: 4-30 7-00 p. m.
9-45 p. m.
Mark Demon
Valerih Fabrizi
in
RINGO AND HIS GOLDEN PISTOL


## வரிவிளம்பரம்

### திருமண அழைப்பு

21-8-67 திங்கட்கிழமை முற்பகல் 11 மணி 30நிமிஷமளவில் வரும் சுபமுகூர்த்தத்தில், எமது புத்திரி சௌபாக்கியவதி பத்மாவதிக்கும், சுன்னாகம் மயிலணியை சேர்ந்த பிரம்மஸ்ரீ. கார்த்திகேச ஐயர் தம்பதிகளின் புத்திரன் சிரஞ்ஜீவி ஸ்ரீநிவாசனுக்கும் திருமணம்நடைபெறும். நான்கு நாட்கள் நடைபெறும் கொண்டாட்ட காலங்களிலும் பங்குபற்றுமாறு அன்பர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். சு. மங்களேஸ்வரக் குருக்களும் பாரியாரும், சிவன்கோவில், காரைநகர். 2499

### விற்பனைக்கு

கார்

முழுவதும் நல்ல நிலைமையில் புதுப்பிக்கப்பட்ட CN 8000 தொடர்பிலக்க மொறிஸ் மைனர் கார் விற்பனைக்குண்டு. 71, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியில் பார்வையிடலாம். 2500

### காணவில்லை

லைசென்ஸ்

மூளாய் வீதியில் பஸ் கண்டக்டருக்குரிய லைசென்சும், அத்தாட்சி அட்டையும் தவறிவிட்டது. எடுத்தவர்கள் தயவுசெய்து 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். இதற்கு சன்மானமுண்டு. சற்குணனந்தன், இ. போ. ச. பருத்தித்துறை 2301

### வாடகைக்கு

வீடு

காங்கேசன்துறை வீதி, கொக்குவிலில் மேல்மாடி வீடு பல வசதி, பிரயோசனத்துடன் வாடகைக்குண்டு. தொடர்புகொள்ளவும். பொ. வேலாயுதபிள்ளை ராமகிருஷ்ணஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். போன்: 7179 2496

### தேவை

முகாமையாளர்

துணுக்காய், யோகபுரம் 5-ம் பிரிவு ஸ்ரீ முருகன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு கீழ்வரும் தகமைகளுள்ள ஓர் முகாமையாளர் தேவை. விண்ணப்பக் கடைசித் திகதி:- 28-8-67. கல்வித்தராதரம்:- கல்விப் பொதுத் தராதரப் பத்திரம், கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திரம். வயது:- 22-க்கும் 35-க்கும் இடையில். பிணை:- ரொக்கப்பிணை ரூபா 1000/-. ஆதனப்பிணை ரூபா 2000/-. வேதனம்:- மாதாந்த வேதனம் ரூபா 125/-. (சகல படிகளும் உட்பட) செ. இராசதுரை, செயலாளர். 2498

ஆசிரியர்

தமிழிலும் ஆங்கிலத்திலும் இரசாயனம், உயிரியல், சுகாதாரம் கற்பிக்கக் கூடிய பட்டதாரி ஒருவர் உடன் தேவை. B. Sc. இறுதிப்பரீட்சை எடுத்தவர்களும் விண்ணப்பிக்கலாம். கொலீஜ் ஒவ் எடியூக்கேஷன் இராசாக் கட்டிடம், ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 2494

### கல்வி

வகுப்புகள்:

ஜி. சி. ஈ. / சாதாரணம்/ உயர்தர வகுப்புகளுக்கு, இரசாயனம், கணிதம் முதலிய பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்படும். விபரங்களுக்கு விளம்பர இல. 2497 ஈழநாடு மே/பா த. பெ. எண் 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 2497

### 'கிளப்'தின விழா

யாழ்ப்பாணம், வெள்ளி
பரந்தன் ரசாயன தொழிற்சாலை கிளப்தின விழா அடுத்த மாதம் 10-ம் திகதி நடைபெறவிருக்கிறது.

பரந்தன் ரசாயன கூட்டுத்ஸ்தாபன அதிபர் திரு. எம். சிவநாதன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். திருமதி சிவநாதன் பரிசில்களை வழங்குவார்.

### வீடு தீப்பற்றியது

புன்னாலைக்கட்டுவன், வெள்ளி
ஊரெழு வடக்கைச் சேர்ந்த வைரவன் முருகன் என்பவரது வீடு தீப்பற்றி எரிந்ததால், சேலைகள், விதைநெல், தையல் மெஷின் ஆகிய பொருட்கள் சேதமடைந்தன. சுன்னாகம் பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

### ஐ. தொ. க. மகாநாடு

கொத்மலை, வெள்ளி
ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரசின் வருடாந்த மகாநாடு இம் மாதம் 26, 27,28-ம் திகதிகளில் எட்டியாந்தோட்டை பழனிசாமி நகரில் கோலாகலமாக நடைபெற விருக்கிறது. இதற்கான வேலைகள் இப்பொழுதே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## சுழிபுரம் அம்பாள் ச. ச. நிலைய விளையாட்டுப் போட்டி முடிவுகள்

சுழிபுரம், வெள்ளி
அம்பாள் சனசமூக நிலைய இல்லங்களுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப்போட்டியில் பாரதி இல்லம் முதலாவது இடத்தையும், வள்ளுவர் இல்லம் இரண்டாவது இடத்தையும்பெற்றன. சில போட்டி முடிவுகள் பின்வருமாறு:-

மேற்பிரிவு- 100 யார் ஓட்டம்: க. கனகரத்தினம், மு. இராமநாதன், சி. தர்மகுலசிங்கம்.

220 யார் தடை ஓட்டம். க. கனகரத்தினம், செ. இராசரத்தினம், ச. குமாரசிங்கம்.

440 யார் ஓட்டம்: க. கனகரத்தினம், ச. குமாரசிங்கம், ஆ. வரதராசா.

குண்டெறிதல், இ சிங்கராசா, க. கனகரத்தினம், ஆ. வரதராசா.

880 யார் ஓட்டம்: க. கனகரத்தினம், ச. குமாரசிங்கம், சி. தர்மகுலசிங்கம்.

மத்திய பிரிவு- 100 யார் ஓட்டம்: இ. பாக்கியநாதன் இ. தர்மராசா, பொ. இராசகுரு.

220 யார் தடை ஓட்டம்: இ. பாக்கியநாதன், பொ. இராசகுரு, வி. அப்புத்துரை

குண்டெறிதல்: இ. தர்மராசா, இ. பாக்கியநாதன், பொ. இராசகுரு.

440 யார் ஓட்டம்: இ. பாக்கியநாதன், ஆ. நாகராசா, பொ. இராசகுரு.

கீழ்ப்பிரிவு, 100 யார் ஓட்டம்: நா. உருத்திரசிங்கம், செ. உருத்திரசிங்கம், சோ தேவராசா.

220 யார் ஓட்டம்: க. குணவிசயசிங்கம், நா. இரத்தினசிங்கம், த. சின்னராசா.

75 யார் ஓட்டம்: அ. சந்திரகாசன், சி. இளங்கீரன், அ. ஜெகநாயகம்.

50 யார் பழம் சேர்த்தல்: ந. புஷ்பராணி, மா. மனோகரி, ". கலைவாணி.

விநோத உடை: க. மனோகரன், மா. செல்வராசா, சி. ஜெயபாலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "காந்தியைப் பின்பற்றலாமென்றால் மாவோவைப் பின்பற்றக் கூடாதா?"

## யாழ். பொதுக்கூட்டத்தில் சண்முகதாசன் கேள்வி

யாழ்ப்பாணம், வெள்ளி

''நாங்கள், மாவோவின் சிடர்கள் தான். அப்படிச் சொல்வதில் பெருமைப்படுகிறோம். தமிழரசுக்கட்சியினர் தங்களைக் காந்தியின் சிடர்கள் என்று கூறும்போது, நாங்கள் ஏன் மாவோவின் சிடர்களாக இருக்கக்கூடாது? காந்தியும் வெளிநாட்டுக்காரர் தானே. காந்தியின் சாத்வீக வழியைத் தமிழரசுக்கட்சியினர் பின்பற்றும்போது மாவோவின் புரட்சி வழிகளை நாங்கள் பின்பற்றுவதில் தவறென்ன?''

யாழ்ப்பாண முற்றவெளியில் நடந்த சீன சார்புக் கம்யூனிஸ்ட்கட்சியின் ஹர்த்தால் தினப் பொதுக்கூட்டத்தில் திரு. என். சண்முகதாசன் மேற்கண்டவாறு கேட்டார்.

திரு. வி. ஏ. கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. சண்முகதாசன் மேலும் கூறியதாவது; ''இலங்கையில் உள்ள எல்லாம் இரவல் சரக்குகள் தான்: இந்துசமயம் இரவல் சரக்கு. பௌத்த, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயங்களும் அப்படித்தான். எல்லாம் வெளிநாட்டுச் சரக்குகள் தான். இந்நிலையில் நாங்கள் சீனவைப் பின்பற்றுவதையிட்டுச் சிலர் தவறான பிரசாரம் செய்கின்றனர்.

இந்தியாவுக்கு அரிசி உட்பட பல பொருட்கள் இங்கிருந்து கடத்தப்படுவதாகக் கூறப்படுகிறது. அதனைப் பிடிக்கமுடியாத பொலிஸார் துண்டுப்பிரசுரம் கொண்டுவந்தவரைப் பிடித்து சிறை வைத்துள்ளார்கள்.

நான் பிறப்பதற்கு முன்பே சாதிப் பிரச்னை இருந்துவந்தது. நான் சீனவுக்குப் போய்வந்த பின் தான் இப்பிரச்னை தோன்றியதல்ல. தீண்டாமைப் பிரச்னையால் எத்தனையோ உயிர்கள் பலியாகின. வீடுகள் தீக்கிரையாகின. ஆனாலும் இப்பிரச்னை தீர்ந்தபாடில்லை.

அதர்மத்திற்கு எதிராகப் பலாத்காரத்தைப் பாவிக்கலாம். அதைத் தான் நாங்கள் சொல்கிறோம். எங்களுக்குப் பாராளுமன்றம் செல்லும் ஆவல் கிடையாது; அவசியமுமில்லை. அதனால்தான் துணிந்து ஒடுக்கப்பட்ட மக்களுக்காகப் போராடுகிறோம். பெரும்பான்மை மக்கள் துப்பாக்கி கொண்டு தாக்கும்போது அதை எதிர்த்துப்போராடாதவன் கோழை. ஹிட்லரை எதிர்த்துப் போராடாதபடியால்தான் நூறுகோடி யூதர் அழிந்தனர். அமெரிக்காவில்கூட நீக்ரோக்கள் உரிமைக்காகச் சத்தியாக்கிரகம் செய்யவில்லை. போராட்டத்தினால் தான் வெற்றியுண்டு. மக்கள் சாகத் தயாராக இருக்கவேண்டும். தியாகம்செய்யாமல் உரிமை பெறமுடியாது.''

திரு. டானியல் பேசும்போது தவணைகள் போடுவதால் தீண்டாமைப் பிரச்னை தீராதென்றும், இப்போராட்டம் முற்போக்குவாதிகளுக்கும் பிற்போக்குவாதிகளுக்கும் இடையில் நடக்கும் போராட்டமென்றும், பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவரும் இன்று சிறையில் இருப்பதாகவும் கூறினார்.

திரு. வி. ஏ. கந்தசாமி பேசும்போது அச்சுவேலிப் பிள்ளையார் கோவில் ஐயர், திருக்கேதீஸ்வரத்திலும் பணியாற்றியிருக்கிறார் என்றும் அங்கு சாதிப்பாகுபாடு காட்டப்படுவதில்லை என்றும் கூறினார்.

வண. தம்மானந்ததேரோ பேசும்போது தாழ்த்தப்பட்ட மக்கள் எல்லோரும் அவர்களுக்கு விருப்பமானால் பௌத்த மதத்தில் சேரலாமெனவும், இதனை தமிழர் பௌத்த சங்கத் தலைவர் தம்மிடம் வலியுறுத்தியிருப்பதாகவும் கூறினார்.

---

### ரகசிய பொலிஸ் . . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இம்மரணம் சம்பந்தமாக மன்னார் உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன் திரு. ஏ. அபயசேகரா, மன்னார் தலைமைக் காரியாலய பொலிஸ்இன்ஸ்பெக்டர் திரு. கனகசிங்கம் ஆகியோர் புலன்விசாரணை செய்கின்றனர். சம்பவம் நடந்த இடத்தில் பலத்த பொலிஸ் பந்தோபஸ்துஅளிக்கப்பட்டுள்ளது. [ந. நி.]

---

### 7 பிள்ளைகளின் . . .

1-ம் பக்கத் தொடர்ச்சி)

வரை அவருக்கு எந்த வேலையும் கிடைக்கவில்லை.

'ஏதாவது கடன் இருக்கிறதா' என்று நான் கேட்டதும், சிரித்தபடி 6,000 ரூபா வரையில் கடன் இருக்கிறது என்று கூறியவர், இருக்கிற வீடும் 2500 ரூபா ஈடு என்று தெரிவித்தார்.

டிக்கட் எங்கு வங்கினீர்கள்?' என்றேன். கள்ளியங்காட்டிலுள்ள சுவீப் ஏஜெண்டிடம் வாங்கியதாகவும், வேறு இடங்களிலும் சில டிக்கற் வாங்கியதாகவும் கூறினார். பல வருடங்களாக தான் தொடர்ந்து சுவீப் டிக்கற் எடுத்து வருவதாகவும் அவர் மேலும் கூறினார்.

'பணமாகப் பரிசைப் பெறப்போகிறீர்களா? அல்லது காரும் பணமும் பெறப் போகிறீர்களா? என்று கேட்டதும், காரும் பணமும் பெறதீர்மானித்திருப்பதாகவும், பணத்தில் கடன்களை தீர்த்துவிட்டு பிள்ளைகளின் எதிர்காலத்திற்கும் ஒதுக்கப்போவதாகவும் கூறினார்.

''உங்களுக்குபரிசு கிடைத்ததாக எப்ப தெரியவந்தது?'' என்றேன். 'வழக்கமாக 'ஈழநாடு' பத்திரிகையில் தான் என் டிக்கட் நம்பர்களை ஒப்பிட்டுப் பார்ப்பேன். இன்று காலை எனக்கு டிக்கட் கிடைக்கவில்லை. ஆதலால் மாலைத் தினசரி பத்திரிகைகளை வாங்கி பார்த்தேன். அவற்றில் சுவீப் முடிவுகள் போடப்படவில்லை, அதனால் கடைக்காரரிடம் எனது நம்பரை கூறினேன். அவர் தனது கடையிலிருந்த 'ஈழநாடு' பத்திரிகையைப் பார்த்து 'உனக்குத்தான் முதல் பரிசு' என்றார். அதன்பின்னர் பொலிசுக்கு 'வந்து அறிவித்தேன்'' — இப்படி அவர் கூறினார்.

முதலில் என் மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் அறிவிக்க வேண்டும் என்று கூறினார்.

---

### 119 பேர்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நீக்கப்பட்டுவிட்டார்களென்றும் கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல இன்று தெரிவித்தார். மிகுதி 131 ஆசிரியர்களுக்கும் மீண்டும் வேலை வழங்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சர் இரியகொல்லை தெரிவித்தார். இத் [illegible] தென்றும் அவர் கூறினார்.

---

# காதல் தோல்வியால் இளைஞன் தற்கொலை

## காதலியை கத்தியால் 11 தடவை குத்தியது அவரின் இறுதிச்செயல்

காலி, வெள்ளி

இரண்டு வருட காலமாக காதலித்து வந்த பெண், கடைசியில் கைவிட்டதாக கருதி ஏமாற்றமடைந்த ஒரு வாலிபர் அப் பெண்ணை பதினொருதடவை கத்தியால் குத்தியபின் அவள் இறந்துவிட்டாளென கருதி நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்ட பரிதாபமான சம்பவம் தெரணியாகலையில் நடந்துள்ளது.

தெரணியாகலையை சேர்ந்த ரஞ்சிதா ரத்னபாலாவின் மரண விசாரணையின்போது மேற்கண்ட விபரம் தெரிவிக்கப்பட்டது. திரு. டட்லி சமரவிக்கிரமா மரண விசாரணை நடத்தினார்,

மரண விசாரணையின்போது மேலும் கூறப்பட்டதாவது: காலஞ் சென்ற இரத்தினபாலா என்ற வாலிபர், காலியை சேர்ந்த விஜிதா என்ற இளம் பெண்ணை இரண்டு வருடமாக காதலித்து வந்தார். இருவரும் கொழும்பில் வெவ்வேறு கம்பெனிகளில் வேலைபார்த்து வந்தனர். கடந்த வியாழக்கிழமை காலி கச்சேரியில் திருமணப் பதிவு செய்வதற்கு வாலிபர் ஏற்பாடு செய்தார். இதன் பொருட்டு, இவ்வாரம், தனது காதலிக்கு, தையல் மெஷினும், தளபாடங்களும், சேலைகளும் வாங்கிச் சென்றார். ஆனால் அவ்வாலிபர் கட்டிய கோட்டையை நொடிப் பொழுதில் காதலி இடித்து தள்ளிவிட்டாளாம்.

ஏமாற்றமடைந்த வாலிபர் காலிக்கு சென்று கூரிய கத்தியொன்றை வாங்கினார். அன்று மாலைப் பொழுதில் தனதுகாதலியை அவள் வீட்டிற்கு அருகே சந்தித்து பேசிக் கொண்டிருந்தார். அப்பெண்ணின் தயார் அவ்விடத்தை விட்டுச் சென்றதும், அவ்வாலிபர் கத்தியை உருவி காதலியை பதினொருதடவை குத்தியதாக தெரிவிக்கப்பட்டது.

காதலி இறந்து விட்டாள் எனக் கருதிய வாலிபர், தன்னையும் கத்தியால் குத்தியதோடு நச்சுத் திராவகம் அருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

பொலிஸார் வாலிபரின் சடலத்தையும், கூரிய கத்தியையும், நச்சு திராவக புட்டியையும், ஒரு [illegible]யில் கண்டு எடுத்தனர்.

---

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 19-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

# குடும்பத்தில் நால்வர் கோரக் கொலை

கொழும்பு, வெள்ளி

வெலிக்கடை பொலிஸ் வட்டாரத்தில் 4 பேர் நேற்றிரவு படுமோசமாக வெட்டிக்கொல்லப்பட்டிருக்கிறார்கள். 60 வயதான வி. ஏ. ஜேமிஸ் பெரேராவும் அவர் மனைவியும் ஸ்தலத்திலேயே மரணமானார்கள், அவர்களின் 19 வயது யுவதி மகளான ரத்னவதியும் 50 வயது சகோதரரும் ஆஸ்பத்திரிக்குகொண்டுபோகும் வழியில் மரணமானார்கள். 40 வயது வேலைக்காரியான மேரி பெரேரா ஆஸ்பத்திரியில் மிக ஆபத்தான நிலையில் இருக்கின்றார். வீட்டுக்குப் பக்கத்தில் 'ரோடு' போடுவதற்குஇடங்கொடுப்பதற்கு இவர்கள் மறுத்ததாகவும், அதுசம்பந்தமாக நடைபெற்றவழக்கில் இவர்கள் வெற்றிபெற்றதாகவும் இந்தக் கொலைக்கு இந்த விவகாரம்தான் காரணமென்றும் கருதப்படுகின்றது.

கத்திகளும், வாள்களும் இச் சம்பவத்தில் பாவிக்கப்பட்டுள்ளன. ஆனால் எதுவும் கைப்பற்றப்படவில்லை. இச்சம்பவம் சம்பந்தமாக மூன்று நபர்கள் கைதாகியுள்ளனர். இவர்களில் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்குள்ளாகியுள்ளார்.

---

# கமிஷன் நியமிப்பதுபற்றி மந்திரிசபையுடன்ஆலோசனை

## சமூக சேவைகள் மந்திரி நடத்துவார்

கொழும்பு, வெள்ளி

சமூக குறைபாடுகளை நீக்குவதற்காக சட்டத்தை அமுல் நடத்துவது பற்றியும் வடக்கில் அண்மையில் நடைபெற்றுள்ள சம்பவங்கள் குறித்து விசாரிக்க கமிஷன்நியமிப்பதுபற்றியும் சமூக சேவைகள் மந்திரி திரு. அசோகா கருணரத்தின மந்திரிசபையுடன் கலந்தாலோசிக்கவிருக்கிறார் என்று அறியப்படுகிறது.

மந்திரிசபையில் அடுத்த கூட்டத்தில் மந்திரி இந்த விஷயம் குறித்து ஆலோசனை நடத்தக்கூடும். பிரதம மந்திரி, ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, நீதிமந்திரி திரு. எப். விஜயமான ஆகியவர்களுடன் சமூகசேவைகள் மந்திரி ஆலோசனை நடத்துவார் என்றும் தெரிகிறது.

---

### உடுறவண புதிய செனட்டர்

கொழும்பு, வெள்ளி

தலதாமாளிகை தியவாதன நிலாமை திரு. எச். பி. உடுறவன செனட்சபை அங்கத்தவராக கவர்னர் ஜெனரலால்நியமிக்கப்பட்டிருக்கிறார்.

செனட்டர் டுணுவில காலமானதால் ஏற்பட்ட காலிஸ்தானத்துக்கு திரு. உடுறவண நியமிக்கப்பட்டுள்ளார்.

---

# சக அங்கத்தவர் 5 பேரை வேலைநீக்க வேண்டுமாம்

## 15 'ரலி' குமாஸ்தாக்கள் வேண்டுகோள்

காங்கேசன்துறை, வெள்ளி

வடபகுதி 'ரலி' குமாஸ்தாக்கள் சங்கத்தைச் சேர்ந்த எஸ். சித்திரவேல், வி. கணிதசிங்கம், வி. செல்லையா, ஏ. வி. கிறிஸ்ரிராஜா, எஸ். பாலசுப்பிரமணியம் ஆகியோரை உடனடியாக வேலைநீக்கம் செய்யுமாறு கோரி 15-க்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் கைச்சாத்திட்டு சங்கத்தலைவரிடம் சமர்ப்பித்துள்ளனர். நேற்றிரவு காங்கேசன்துறைத் துறைமுகத்தில் நடைபெற்ற அரிசிக் களவு சம்பந்தமாகவே மேற்படி ஐந்துபேரையும் வேலை நீக்கம் செய்யும்படி இவர்கள் கோரியுள்ளனர்.

சுங்க அதிகாரிகள் உட்பட உணவு இலாகா அதிகாரிகள், ஊழியர்கள்ஆகிய 21 பேர் கடமையாற்றியும் இக்களவு நடைபெற்றதைத் தொடர்ந்து ரலி குமாஸ்தாக்கள் சங்க அங்கத்தவர்கள் பூரண விசாரணை நடத்தும்படி தலைவரிடம் கோரியுள்ளனர்.

---

### இன்று

யாழ்ப்பாணம், சனி

தெல்லிப்பழை பாலர் ஞானோதயசபை 21-வது ஆண்டு பரிசளிப்புவிழா இன்று மாலை வடமாகாண உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை தலைமையில் காசிவிநாயகர் ஆலய முன்றலில் நடைபெறும்.

---

பண்டத்தரிப்பு, வெள்ளி

பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. பினரின் 'என்றும் நீ' நாடகம் இம்மாதம் 19-ம் திகதி பண்டத்தரிப்பு மகளிர் உயர் நிலையக் கல்லூரியில் மேடையேறுகிறது.

---

### காலமானார்

யாழ்ப்பாணம், சனி

உடுப்பிட்டி 'ஈழநாடு' ஏஜெண்ட் திரு. எம். பொன்னையா காலமாகிவிட்டார். அன்னாரது ஈமைக்கிரியைகளில் பல பெரியார்களும், பிரமுகர்களும் கலந்துகொண்டனர்.

---

### ராதாவின் . . .

]1-ம் பக்கத் தொடர்ச்சி]

கூறியதாகவும் கூறினார்.

அடுத்து பிளைமவுத் காரில் எம். ஜி. ஆரை ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோன மாணிக்கம் என்பவர் சாட்சியமளித்தார்.

சத்தியராஜ் படக்கம்பனியிலிருந்து பால்மாவும் ஒலிபெருக்கியும் எம். ஜி. ஆர். தோட்டத்துக்கு ஜீப்பில் கொண்டுவந்ததாகவும் ராதாவும் வாசுவும் எம். ஜி. ஆர். வீட்டுக்கு வந்ததைப் பாரத்ததாகவும் சிறிது நேரத்தில் எம். ஜி. ஆர். காயத்துடன் காதைப் பொத்திக்கொண்டு வெளியில் வந்ததாகவும் கூறினார். எம். ஜி. ஆரின் சாரதி இல்லாததால் தாம் பிளைமவுத் காரை ஓட்டிச் சென்றதாகவும் மணிக்கம் கூறினார்.

எம். ஜி. ஆரின் வீட்டுக் காவலாளி பாப்புச்சான் சாட்சியமளிக்கையில், எம். ஜி. ஆர். காரில் போன பிறகு ராதா ரத்தம் ஒழுகிக் கொண்டு வந்ததைக் கண்டதாகவும் அவரை அவருடைய காவல்காரன் அழைத்துச் சென்றதாகவும் கூறினார்.

இன்று மீண்டும் விசாரணை தொடரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org